R4932

INTERESTING QUESTIONS
ஆவலைத்தூண்டும் கேள்விகள்

"நாம் எப்படி தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்"

கேள்வி : அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாக உண்மையிலேயே இருக்கிறார்களா அல்லது கருதப்படுகிறார்களா?

பதில் : அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகள் உண்மையிலேயே தேவனுடைய பிள்ளைகள். வேதவாக்கியங்கள் காரியத்தை இப்படியாக அறிவிக்கிறது. "இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு நாம் ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3:2) "பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5:17) நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள் அல்லது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவில்லை. நீங்கள் சரியானபடி அர்ப்பணம் செய்திருந்து, தேவன் உங்களை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணியிருந்தால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். பிரியமான நண்பர்களே, இந்த காரியத்தை நமது மனதிலே தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தில் மாபெரும் ஆல்பர்ட் ஹால் கூட்டத்திற்கு பிறகு ஒரு தொழிலதிபர் எங்களிடம் கூறியதாவது: "உங்கள் பேச்சை கேட்பதற்காக நான் ஆல்பர்ட் ஹாலுக்கு சென்றிருந்தேன். நீங்கள் என்னை மனம் சோர்ந்து போகப் பண்ணினீர்கள்." முதலில் அவர் என்ன சொன்னார் என்பது எங்களுக்கு புரியவில்லை. தொடர்ந்து அவர் கூறியதாவது: "நான் ஒரு நல்ல எபிகோபல் சபையைச் சேர்ந்தவன் என்றும் தேவன் கொடுப்பதற்கென்று ஏதாவது இருந்தால், மற்றவர்களைப் போல நானும் நிச்சயமாக பெற்றுக்கொள்வேன் என்றும் நினைத்திருந்தேன். நீங்கள் பேசிய விதத்திலிருந்து ஒரு "சிறு மந்தை" மட்டுமே தேவன் வைத்திருக்கிற இந்த நன்மையான காரியங்களை பெறுகிறார்கள் என்று காண்கிறேன். நீங்கள் எனது விசுவாசத்தை முற்றிலும் கவிழ்த்துப் போட்டிருக்கிறீர்கள்."

அந்த கனவான் என்ன சொன்னார் என்பதைப் புரிந்து கொண்ட பிறகு, நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம் என்று கூறினோம். ஏனெனில் தேவனுடைய நிபந்தனைகளை அவர் தவறாக புரிந்துகொண்டதிலிருந்து அவரது மரணத்துக்கு முன்னரே அவரை எழுப்ப வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். "நான் நரகத்திற்கு போவதைக் காட்டிலும் நான் உமக்கு ஊழியம் செய்வேன். இந்த அளவுக்குத்தான் உம்மில் விருப்பங்கொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறவர்களை தேவன் அழைப்பதில்லை. நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிறவர்களையே தேவன் அழைத்துக்கொண்டிருக்கிறார். அந்த வகையானவர்களை அவரது விசேஷித்த இடத்திற்கு, தம்முடைய குமாரனின் உடன் சுதந்தரராயிருப்பதற்கு பெற்றுக்கொண்டிருக்கிறார். மீதியுள்ள மனுமக்களை அவர் அழைப்பதில்லை. இந்த சுவிசேஷ யுகத்திற்கு பிறகு உள்ள காலமே, பூமிக்குரிய தளத்தில் அவர்களது ஆசீர்வாதத்தை பெறுவதற்கும் மானிட பரிபூரணத்தை அடையவும் ஏற்ற காலமாக இருக்கும்.

ஆவிக்குரிய அல்லது பரலோக அழைப்பை பெறுகிறவர்கள் பரிசுத்தவான்களாக இருப்பவர்கள் மட்டுமேயாகும். இருதயத்தில் பரிசுத்தம் இல்லாதவர்களையும், தூய்மையான நோக்கங்கள் இல்லாதவர்களையும், விசேஷித்த தூய்மை இல்லாதவர்களையும் தேவனிடம் ஆழமான விசுவாசம் இல்லாதவர்களையும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, இயேசுவுடன் இணைந்திருக்க தேவன் உயர்த்துவார் என்று எப்படி நாம் நினைக்க முடியும்? இப்படிப்பட்ட ஜனங்கள் மிகவும் உயர்ந்த இடங்களில் வைத்து தெய்வீக சுபாவத்தை அவர்களுக்கு கொடுப்பார் என்று நீங்கள் அறிந்தால் தேவனுடைய ராஜ்யத்தை நீங்கள் மதிக்கமாட்டீர்கள். காரியம் இப்படித்தான் இருக்கும் என்று நீங்கள் நம்பினால், சர்வ வல்லவரின் அரசாங்கத்தின் மேலிருந்து அனைத்து மரியாதையையும் நீங்கள் இழக்க வேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு இயேசுவுடன் இணைகிறவர்கள் தம்முடைய குமாரரின் சாயலாக இருப்பார்கள் என்று தேவன் கூறினால், "அது சரியாக தோன்றுகிறது" என்று நீங்கள் கூறுவீர்கள். அது சரியானது தான், தேவனுடைய வழிகள் நீதியும் நியாயமுமானவைகள். "சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உமது வழிகள் உண்மையும் நீதியுமானவைகள்" என்று சொல்லாமல் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த முடியாது.

ஆனால் யாராவது நித்திய காலமாக அக்கினியில் வறுக்கப்படுவார்கள் அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்தில் கொஞ்ச காலம் இருப்பார்கள் என்று சொல்லுவதை நாம் சரி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அதை நீதியானதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட வழிகள் மிகவும் அநியாயமானவைகள். யாரும் தங்களது குறைவுகளுக்காக நித்திய கால வேதனையையோ, நூறு வருட வேதனையையோ அல்லது ஒரு வருட வேதனையையோ கூட அனுபவிக்க மாட்டார்கள். பலவீனமான, அபூரணமான மானிட ஜீவிகளை பூரணத்திற்கு பொறுப்பாக்கி அதில் குறைவுபட்டால் வேதனைப்படுத்தப்படுவார்கள் என்பது சரியானதாக இருக்காது. எந்த அளவுக்கு நீங்கள் தீமையோடு ஒத்துழைக்கிறீர்களோ அந்த அளவுக்கு அது உங்களுக்கு சரீர பிரகாரமாக, மனதின் பிரகாரமாக, நீதி நெறியின் பிரகாரமாக சீர்கேட்டை கொண்டு வரும். கீழே செல்லும் ஒவ்வொரு அடியும் மீண்டும் அதே பாதையில் திரும்ப வேண்டும். இந்த வாழ்க்கையிலோ அல்லது எதிர்கால வாழ்க்கையிலோ நன்மை அடைவதற்காக ஆகும். வேதவாக்கியங்கள் கூறுவது போல நீதிமானுக்கும், தீமை செய்பவர்களுக்கும் நீதியான இழப்பீடு உண்டு.

தேசமானது தனது ஓய்வை ஆசரிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டது

கேள்வி : வேதாகம பாடங்களின் தொகுதி 2இல் ஒரு அத்தியாயத்தில், இஸ்ரயேலர் முன்பு ஆசரிக்காத ஓய்வு நாட்களை அவர்கள் சிறைப்பட்டிருந்த காலத்தில் ஆசரிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இந்த ஓய்வு நாட்கள் தொகுதி 2இல் யூபிலி என்று ஏன் அழைக்கப்படுகிறது?

பதில் : இஸ்ரயேலர்கள் பாபிலோனில் இருந்த போது ஓய்வு நாளை ஆசரிக்கும்படி பலவந்தப்படுத்தப்படவில்லை. ஆனால் யூதர்கள் பாபிலோனில் இருந்த போது அவர்களது தேசம் ஓய்வை அனுசரித்தது என்று தொகுதி 2இல் கூறப்பட்டுள்ளது. தேவன் இவ்விதமாக

கூறுகிறார். (2 நாளாகமம் 36:20,21) யூபிலி வருடத்தில் தேசமானது ஓய்வில் இருக்க வேண்டும் என்று யூதர்கள் கட்டளையிடப்பட்டார்கள். மற்ற மனுக்குலத்தாரைப் போல யூதர்களும் சுயநலமாக, வருட முழுவதும் தேசம் ஓய்வாக இருந்தால் வரி முதலானவைகளுக்கு என்ன செய்வது என்று பயந்தார்கள். ஆகையால் யூபிலிகளை அவர்கள் சரியானபடி ஆசரிக்கவில்லை. இஸ்ரயேலர்கள் சிறையிருப்புக்குப் போகும் வரை பத்தொன்பது யூபிலிகளை ஆசரித்திருந்தார்கள். அவர்களில் தேவன் மிகவும் அதிருப்தி அடைந்தார். அவர் கூறியதாவது: நீங்கள் தேசத்தில் இருந்த போது, தேசமானது தனது ஓய்வை சரியானபடி ஆசரிக்கவில்லை. நீங்கள் ஓய்வு நாளை சரியானபடி ஆசரிக்கவில்லை. இங்கே நாங்கள் யூதர்களை குறைகூறவில்லை, ஏனெனில் கர்த்தர் இப்படிப்பட்ட கட்டளையை அமெரிக்காவிலோ அல்லது வேறு எந்த தேசத்திலோ கொடுத்திருந்தால் சிலர் மட்டுமே இதை அனுசரித்திருப்பார்கள்.

நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வு வருடம் ஒவ்வொரு ஏழாவது வருஷத்திலும் வந்தது. ஏழேழு வருடங்களை எண்ணி ஐம்பதாவது வருடம் பெரிய யூபிலி வருடம். இப்படியாக இரண்டு ஓய்வு வருடங்கள் வந்தன. அவற்றில் ஒன்று ஐம்பதாவது வருடம். மகா யூபிலி வருடமாக இருந்தது. இந்த ஓய்வுகளை யூதர்கள் அரைமனதுடன் ஆசரித்தார்கள். ஆகையால் தேவன் அவர்களை தேசத்திலிருந்து வெளியேற்றி, தேசமானது ஓய்வு வருடங்களை நிறைவேறும்படியாக அவர்களை சத்துருக்களின் தேசத்திற்கு அனுப்பினார். இந்த கால அம்சங்களின் முக்கியத்துவத்தை யூதர்கள் புரிந்துகொள்ளும்படி விரும்பவில்லை. ஏனெனில் யூதர்கள் இப்பொழுதும்கூட அதை புரிந்து கொள்ளவில்லை. தேவன் அதை யூதர்கள், புரிந்து கொள்ளவேண்டும் என்று வைத்திருந்தால், அதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் கடந்த கால அம்சங்கள் எல்லாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்காக கொடுக்கப்பட்டிருந்தன. இஸ்ரயேலரையும் முழு உலகத்தையும் தேவன் ஆசீர்வதிக்கக்கூடிய காலம் எப்பொழுது வரும் என்பதை காண்பிப்பதற்கான எண் 70 அங்கே வைக்கப்பட்டது. காலம் வரும் போது யூதர்கள் அவர்களது ஓய்வுகள், சிறையிருப்பு மற்றும் சகல காரியங்களின் நிறைவேறுதல்களை புரிந்து கொள்வார்கள். யூதர்கள் மற்றும் உலகத்தாரைக் காட்டிலும் அதிகமாக ஒரு உயர்ந்த, ஆவிக்குரிய ஆதாரத்திலிருந்து நாம் இந்த தகவல்களை பெறுகிறோம்.